தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

11.10.2012 P.M

12.10.2012 A.M

## தக்காளி கிலோ ரூ.5



கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வரத்து அதிகரித்திருப்பதால் கடந்த சில தினங்களாக தக்காளியின் விலை குறைந்து ஒரு கிலோ ரூ.5 முதல் ரூ.8 வரை விற்கப்பட்டது.

கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தக்காளி கர்நாடகம், ஆந்திரம், ஓசூர், கிருஷ்ணகிரி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கொண்டுவரப்படுகிறது.

கடந்த சில தினங்களாக தக்காளியின் வரத்து அதிகளவில் உள்ளதால் கிலோ ரூ.5 முதல் ரூ.8 வரை மொத்த விற்பனையில் விற்கப்படுகிறது.

இதுகுறித்து கோயம்பேடு மார்க்கெட் தக்காளி சங்கத் தலைவர் என்.தியாகராஜன் கூறியது: கர்நாடகம், ஆந்திரம் போன்ற பகுதிகளில் அண்மைக்காலமாக மழை பெய்ததால் தக்காளியின் விளைச்சல் அதிகரித்துள்ளது.

இதனால் கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வரத்தும் அதிகரித்துள்ளது. இதனால் தக்காளி விலையும் குறைந்துள்ளது. மேலும் தரம் குறைந்த தக்காளி வகைகளும் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன என்றார்.

## யூரியா விலை டன்னுக்கு ரூ.50 உயர்வு

யூரியா விலை டன்னுக்கு ரூ.50 உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் சில்லறை விற்பனை விலையில், 50 கிலோ மூட்டைக்கு ரூ.2.50 உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு மற்றும் மானிய நடைமுறை மாற்றத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக்குழு வியாழக்கிழமை கூடியது.

இக்கூட்டத்தில், யூரியாவின் விலை டன்னுக்கு ரூ.50 உயர்த்தப்பட்டுள்ளது. இந்த விலை உயர்வு வரும் நவம்பர் முதல் அமல்படுத்தப்படவுள்ளது.

இதற்கு முன், 2010 ஏப்ரலில் 10 சதவீதம் விலை உயர்த்தப்பட்டு டன் ரூ.5,310க்கு விற்பனை செய்யப்பட்டது. மேலும், உர மானியம் விவசாயிகளுக்கு நேரடியாகச் சென்றடையும் வகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை, உர நிறுவனங்களுக்கு யூரியாவுக்கான மானியத்தில், 85 முதல் 90 சதவீதத்தை நிறுவனங்களுக்கு அரசு வழங்கி விடும். அங்கீகரிக்கப்பட்ட தணிக்கையாளர், உர விற்பனை குறித்து வழங்கும் அறிக்கையின் அடிப்படையில் மானியம் வழங்கப்பட்டு வந்தது.

எஞ்சிய 10 முதல் 15 சதவீத மானியம், மாநில அரசு, உர விற்பனை குறித்து அளிக்கும் ஒப்புகையின் அடிப்படையில் வழங்கப்பட்டு வந்தது.

புதிய நடைமுறையின் படி, எஞ்சிய மானியமானது சில்லறை வர்த்தகர்களால் உர விற்பனை செய்யப்பட்டதற்கான ரசீதின் அடிப்படையில் வழங்கப்படும்.

இதற்காக, சில்லறை வர்த்தக வியாபாரிகள் உர விற்பனை குறித்து, எஸ்எம்எஸ் அல்லது இணைய தளத்தின் மூலம் ரசீதுகளை உர நிறுவனத்துக்கு அனுப்ப வலியுறுத்தப்படுவர்.

இந்த நடைமுறைகள் மூலம் விவசாயிகளுக்கு உரம் தட்டுப்பாடின்றி கிடைப்பது வெளிப்படைத்தன்மை மூலம் உறுதிப்படுத்தப்படும்.

மேலும், மானிய விலையில் வழங்கப்படும் யூரியா, தொழிற்சாலைகளுக்குக் கள்ளச்சந்தையில் கிடைப்பதைத் தடை செய்யவும் வகை செய்யப்பட்டுள்ளது என ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த நிதியாண்டில் ரூ.67 ஆயிரம் கோடி உர மானியமாக வழங்கப்பட்டது. இதில், யூரியாவுக்கு மட்டும் ரூ.24 ஆயிரத்து 500 கோடி ஒதுக்கப்பட்டது.

நாட்டின் யூரியா உற்பத்தித் திறன் 2.20 கோடி டன் ஆகும். 70 லட்சம் முதல் 80 லட்சம் டன் வரை ஆண்டு தோறும் இறக்குமதி செய்யப்படுகிறது.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வியாழக்கிழமை வினாடிக்கு 10,700 கன அடியாகக் குறைந்தது.

மேட்டூர் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்த பலத்த மழையால், அணைக்கு புதன்கிழமை வினாடிக்கு 15 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் புதன்கிழமை இரவு மழை குறைந்தது. இதையடுத்து, அணைக்கு வரும் நீரின் அளவு வியாழக்கிழமை இரவு வினாடிக்கு 10,700 கன அடியாகக் குறைந்தது.

அணையின் நீர்மட்டம் 70.40 அடியாக இருந்தது. பாசனத்துக்காக வினாடிக்கு 18,363 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. நீர் இருப்பு 33.04 டி.எம்.சியாக உள்ளது

## இன்றும் மழை பெய்ய வாய்ப்பு

தென் தமிழகத்தின் பல இடங்களில் வெள்ளிக்கிழமை (அக். 12)மழையோ அல்லது இடியுடன் கூடிய பலத்த மழையோ பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. வட தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் மழையோ, இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும்.

வியாழக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், திருநெல்வேலி மாவட்டம் சிவகிரி - 70; தஞ்சாவூர் மாவட்டம் கல்லணை, விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு, திருச்சி மாவட்டம் துவாக்குடி - 50; புதுக்கோட்டை - 40; சிவகாசி, பெரியார் அணை, குளித்தலை, திருநெல்வேலி

மாவட்டம் சேரன்மாதேவி - 30; திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி, தேனி மாவட்டம் கூடலூர், திருச்சி மாவட்டம் லால்குடி, புதுக்கோட்டை மாவட்டம் பெருங்குளத்தூர், தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை - 20.

## நெல்லையில் இடி, மின்னலுடன் மழை

திருநெல்வேலி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வியாழக்கிழமை மாலையில் ஒரு மணி நேரம் இடி, மின்னலுடன் மழை பெய்தது. இதனால் நகரில் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது.

திருநெல்வேலியில் கடந்த புதன்கிழமை பெய்த மழை வியாழக்கிழமை மாலையிலும் ஒரு மணி நேரத்துக்கு மேலாக நீடித்தது. இதனால் சாலையோரங்களிலும், தாழ்வான பகுதிகளிலும் மழைநீர் தேங்கியது. இதனால் சந்திப்பு, பாளையங்கோட்டை, நகரம், வண்ணார்பேட்டை உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் பிரதான சாலைகளில் கடும் போக்குவரத்து நெரிசல் காணப்பட்டது. வாகனங்கள் ஒரு குறிப்பிட்ட தூரத்தை மெதுவாகவே கடக்க நேரிட்டது.

ஸ்ரீபுரத்தில் தாழ்வான பகுதியிலுள்ள தபால் நிலையத்துக்குள் மழைநீருடன் சாக்கடை நீரும் புகுந்ததால் அங்கு முழங்கால் அளவுக்கு மேல் தண்ணீர் தேங்கியிருந்தது. தென்காசி பகுதியில் அரைமணி நேரத்துக்கு மிதமான மழை பெய்தது. ஆனால் மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் எதிர்பார்த்த அளவுக்கு மழை பெய்யவில்லை.

11th oct 2012 P.M

## பயிர்காப்பீடு தொகையை கடனில் வரவு வைக்க உயர்நீதிமன்றம் தடை



பயிர் காப்பீடு தொகையை விவசாயிகள் பெற்ற கடனில் வரவு வைப்பதற்கு சென்னை உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

தானே புயலால் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு பயிர்காப்பீடு தொகையை கடனில் வரவு வைக்கும்படி மாவட்ட கூட்டுறவு வங்கி பொதுமேலாளர் கிராம கூட்டுறவு வங்கிகளுக்கு அறிவுறுத்தியிருந்தார். அதன்படி விவசாயிகளுக்கு காப்பீட்டு இழப்பீடு தொகை விவசாயிகள் பெற்ற கடனில் வரவு வைக்கப்பட்டு வந்தது. இதற்கு விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்நிலையில் தமிழக உழவர் முன்னணி கடலூர் மாவட்டச் செயலாளர் சி.ஆறுமுகம் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநலவழக்கை தாக்கல் செய்தார். வழக்குரைஞர் அஜாய்கோஷ் வாதாடினார். இவ்வழக்கு விசாரணை தலைமைநீதபதி முன்பு புதன்கிழமை விசாரணைக்கு வந்கசு. விசாரணையில் தமிழக உழவர் முன்னணி வாதத்தை ஏற்று உயர்நீதிமன்றம் பயிர்காப்பீடு இழப்பீடு தொகையை கூட்டுறவு கடனுக்கு ஈடு செய்து கொள்ளும் கூட்டுறவுத்துறை ஆணைக்கு தடை விதித்தது. மேலும் 3 வார காலத்திற்குள் பதலளிக்குமாறு கூட்டுறவுத்துறைக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. தானே புயலால் பேரழிவுக்கு உள்ளாகி, காவிரிநீர் மறுக்கப்பட்டதால் குறுவை சாகுபடி பயிரை இழந்தும், தற்போது மின்வெட்டால் சம்பா சாகுபடியும் கேள்விக்குறியாகி தத்தளிக்கும் விவசாயிகள் இந்த ஆணையின் மூலம் நிவாரணம் பெறுவார்கள் என்பது சற்று மகிழ்ச்சியாக உள்ளது என உழவர் முன்னணி மாவட்டச் செயலாளர் சி.ஆறுமுகம் தெரிவித்தார்.

## சேலம் மாவட்டத்தில் 152 மி.மீட்டர் மழை

சேலம் மாநகரம், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் திங்கள்கிழமை இரவு பலத்த மழை பெய்தது. இதில் மாவட்டம் முழுவதும் மொத்தம் 152 மி.மீட்டர் மழை பதிவானது.

சேலத்தில் திங்கள்கிழமை இரவு சுமார் 2 மணி நேரம் பலத்த மழை கொட்டியது. காலையில் வழக்கம்போல் அதிக வெப்பத்துடன் காணப்பட்ட வானிலையில் இரவில் திடீர் மாற்றம் ஏற்பட்டது.

இரவு சுமார் 9 மணியளவில் மாநகரின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்யத் தொடங்கியது. இரண்டு மணி நேரம் நீடித்த இந்த மழையால் நகரின் பல்வேறு பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இதைப் போலவே வாழப்பாடி, மேட்டூர், சங்ககிரி, எடப்பாடி உள்ளிட்ட மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் மழை பெய்தது.

செவ்வாய்க்கிழமை இரவும் மாநகரின் சில இடங்களில் மழைத் தூறல் இருந்தது.

சேலம் மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி வரையிலும் பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

எடப்பாடி- 64, ஓமலூர்- 20, சங்ககிரி- 17, மேட்டூர்- 16.20, சேலம்- 13.50, வாழப்பாடி- 11, ஏற்காடு- 8.40, தம்மம்பட்டி 2.30, மொத்தம் - 152.40.

## கத்தரியில் பூச்சித் தாக்குதலை எதிர் கொள்வது எப்படி?

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒசூர், ராயக்கோட்டை, சூளகிரி, வேப்பனப்பள்ளி, ஐகுந்தம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் 250 ஹெக்டரில் கத்தரி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

கத்தரி இப்போது பூப்பிடித்து காய் தருவிக்கும் நிலையில் உள்ளது. இந்த நிலையில், இளந்தண்டு, காய்த் துளைப்பானின் தாக்குதல் அதிக அளவு காணப்படுகிறது.

இதன் அறிகுறிகள், இவற்றைக் கட்டுப்படுÒத்தும் வழிமுறைகள் குறித்து டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் டி.சுந்தராஜ் கூறியது:

இளந்தண்டு, காய்த் துளைப்பானைத் தடுக்க மருந்து தெளிப்பது மட்டும் நிரந்தரத் தீர்வாக அமையாது. மேலும், இந்தப் பூச்சிகளை ஒருங்கிணைந்த முறையில் எளிதில் கட்டுப்படுத்தலாம். இந்த வகையான பூச்சிகள் கத்தரி, உருளைக்கிழங்கு, பாகல், பச்சைப் பட்டாணி, மணத் தக்காளி, சுண்டை, கண்டங்கத்திரி, ஊமத்தை செடிகளை தாக்குகிறது.

அறிகுறிகள்: கத்தரி நடவு செய்த சுமார் 15 முதல் 20 நாள்களிலிருந்து இந்தப் புழுத் தாக்குதல் தொடங்குகிறது. இந்தத் தருணத்தில் புழுக்கள் செடிகளின் நுனிக் குருத்தின் கீழ் துளைத்து உள் பகுதியை உண்பதால் குருத்துப் பகுதி வாடி காய்ந்து விடுகிறது.

பூ மற்றும் காய்க்கும் தருணத்தில் உள்ள பூ மொட்டுகள், பூக்கள், பிஞ்சுக் காய்களை இந்தப் புழு தாக்குகிறது. இதனால், காய் பிடிப்புத் திறன் பாதிக்கப்படுவதுடன் மகசூலும் கணிசமாகக் குறைகிறது. தாக்கப்பட்ட காய்களின் மேல் துவாரங்கள் காணப்படுவதுடன், அந்தத் துவாரங்களின் மேல் புழுவின் கழிவுப் பொருள்கள் தள்ளப்பட்டிருப்பதைக் காண முடியும்.

மேலாண்மை: கத்திரியை மட்டும் தொடர்ந்து பயிரிடாமல் பயிற் சுழற்சி முறையில் தானியங்கள், பயறு வகைகளைச் சாகுபடி செய்ய வேண்டும். கத்தரிச் செடிகளின் இடையில் இந்தப் புழுவின் மாற்று உணவுப் பயிர்களை ஊடுபயிராகப் பயிரிடக் கூடாது. அறுவடைக்குப் பின்னும் மாற்று உணவுப் பயிர்களை சாகுபடி செய்வதைத் தவிர்க்க வேண்டும். மேலும், கத்தரி வயல்களிலும், சுற்றுப் புறங்களிலும் வளரும் கண்டங்கத்தரி, ஊமத்தை களைச் செடிகளை அழிக்க வேண்டும்.

இளந்தண்டு, காய்த் துளைப்பானைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 12 இனக் கவர்ச்சிப் பொறிகள் வைத்து ஆண் அந்துப் பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். இனக் கவர்ச்சிப் பொறிகளை கத்தரி நடவு செய்த 15 முதல் 20 நாள்களிலிருந்து அறுவடை வரையிலும் வைக்க வேண்டும். இனக் கவர்ச்சிப் பொறிகளை செடியின் உயரத்திற்கு மேல் இருக்குமாறு வைக்க வேண்டும்.

இந்தப் புழுவின் தாக்குதல் அதிகமாக இருந்தால் ஏக்கருக்கு குளோரான்ட்ரனிலிபுரோல் 30 மில்லி மருந்தைத் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

இந்த மேலாண்மை முறைகளை கடைப்பிடித்து இளந்தண்டு, காய்த் துளைப்பான் தாக்குதலிலிருந்து கத்தரியைப் பாதுகாத்து அதிக மகசூல் பெறலாம்.

தொடர்புக்கு: திட்ட ஒருங்கிணைப்பாளர், டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையம், எலுமிச்சங்கரி, மல்லிநாயனஅள்ளி-அஞ்சல், கிருஷ்ணகிரி மாவட்டம். 04343-296039, 94438 88644.

## கரும்பு விவசாயிகளுக்கு ஆட்சியர் அறிவுரை

தடையில்லா சான்று இன்றி ஒரு சர்க்கரை ஆலையின் வரையறுக்கப்பட்ட பகுதியில் இருந்து கரும்பை மாவட்டத்துக்குள் அல்லது மாநிலத்துக்குள் அமைந்துள்ள வேறு ஒரு சர்க்கரை ஆலைக்கு எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது என்று ஆட்சியர் பொ.சங்கர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவரது செய்திக் குறிப்பு: வேலூர் மாவட்டத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளில், நடப்பு ஆண்டுக்கான கரும்பு அரவைக் காலம் தொடங்கவுள்ளது.

கூட்டுறவு, அரசு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் அவற்றின் 100 சதவீத பிழித்திறனை அடைந்திட, வரையறுக்கப்பட்ட பகுதிகளின் பதிவு செய்யப்படாத வயல்களில் இருந்து கரும்பை கொள்முதல் செய்ய கரும்பு கட்டுப்பாடு சட்டம், 1966-ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு, அரசு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் அவர்களுக்கு வரையறுக்கப்பட்ட பகுதிகளின் பதிவு செய்யப்படாத வயல்களில் இருந்து கரும்பை கொள்முதல் செய்ய விரும்பாத பட்சத்தில், விவசாயிகள் மாவட்டத்துக்குள் அல்லது மாநிலத்துக்குள் வரையறுக்கப்பட்ட சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பை வழங்கலாம்.

ஆனால் அவ்வாறு வழங்குவதற்கு முன், சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலையிடமிருந்து, தடையில்லாச் சான்று பெற வேண்டும்.

தடையில்லாச் சான்று பெற விரும்பும் விவசாயிகள், சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகளிடம் விண்ணப்பம் அளிக்க வேண்டும். விண்ணப்பம் கிடைத்த 14 தினங்களுக்குள் சர்க்கரை ஆலைகள் தடையில்லாச் சான்று வழங்கும்.

அவ்வாறு கிடைக்காதபட்சத்தில் விவசாயிகள் கரும்பு ஆணையாளர், சென்னை-35 அவர்களுக்கு விண்ணப்பம் அளித்து தடையில்லாச் சான்று பெறலாம்.

தடையில்லாச் சான்று இல்லாமல் ஒரு சர்க்கரை ஆலையின் வரையறுக்கப்பட்ட பகுதியிலிருந்து கரும்பை மாவட்டத்துக்குள் அல்லது மாநிலத்துக்குள் அமைந்துள்ள வேறு ஒரு சர்க்கரை ஆலைக்கு எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

## கோழிப்பண்ணை அமைக்க 2,300 பேர் விண்ணப்பம்

விழுப்புரம் மாவட்டத்தில் கோழிப்பண்ணை அமைக்கப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் கள்ளக்குறிச்சி கால்நடை பராமரிப்புத்துறை அலுவலகத்தில் செவ்வாய்கிழமை சரிபார்க்கப்பட்டது.

நாமக்கல் மாவட்டத்தைப்போல் விழுப்புரம் மாவட்டத்திலும் கோழிப்பண்ணை உருவாக்கச் சிறப்புத் திட்டத்தைத் தமிழக அரசு அறிவித்துள்ளது. கறிக்கோழி, முட்டைக்கோழி பண்ணை ஏற்படுத்துவதற்கு 230 பண்ணைகள் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதில் 25 சதவீதம் தமிழக அரசின் மான்யமும், 25 சதவீதம் மத்திய அரசு(நபார்டு) மூலம் அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது 2 ஆயிரத்து 300 விண்ணப்பங்கள் ஆர்வமுள்ள விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்டது. அதை பரிசீலிப்பதற்காக செவ்வாய்க்கிழமை கள்ளக்குறிச்சியில் நேர்முக விசாரணை நடைபெற்றது.

மண்டல இணை இயக்குனர் கே.அழகரசன், கள்ளக்குறிச்சி கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குனர் எஸ்.ராஜேந்திரன், முன்னோடி வங்கி மேலாளர் ஏ.பாலச்சந்தர், கள்ளக்குறிச்சி கோட்ட உதவி மருத்துவர்கள் உள்ளிட்டோர் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் கள்ளக்குற்சிசி, சின்னசேலம், தியாகதுருகம், ரிஷிவந்தியம், சங்கராபுரம், கல்வராயன்மலை உள்ளிட்ட 6 ஒன்றியத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் பங்கேற்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

12.10.2012 A.M

## உர மானியத்திற்கு புதிய நடைமுறை:அமைச்சரவை குழு ஒப்புதல்



புதுடில்லி: பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில், டில்லியில் நேற்று நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு கூட்டத்தில், உர மானிய நடைமுறை மாற்றத்திற்கு, ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அத்தாட்சி சீட்டு:இதன்படி, சில்லரை வர்த்தகர்கள், உரத்தை கொள்முதல் செய்ததற்கான ரசீது மற்றும் அவற்றுக்கான அத்தாட்சி ரசீதின் அடிப்படையில், உர நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படும். இந்த அத்தாட்சி ரசீது, உர மானிய கண்காணிப்பு திட்டங்கள் மூலம் சரிபார்க்கப்படும்.யூரியாவை பொறுத்தவரை, அதன் உற்பத்தி செலவிற்கும், அரசு நிர்ணயித்த அதிகபட்ச சில்லரை விலைக்கும் உள்ள தொகை, மானியமாக வழங்கப்படுகிறது.

பாஸ்பேட், பொட்டாஷ் உரங்களுக்கு, மானியத்தை அரசே நிர்ணயிக்கிறது.தற்போது, உர விற்பனை குறித்து, கணக்கு தணிக்கையாளர் அளிக்கும் சான்றிதழின் அடிப்படையிலேயே, உர நிறுவனங்களுக்கு மத்திய அரசு 85 -90 சதவீதம் மானியம் வழங்குகிறது.

சான்றிதழ்:இத்துடன், மாநில அரசுகள் வழங்கும், உர விற்பனை குறித்த சான்றிதழின் பேரில், எஞ்சிய சதவீத மானியம் வழங்கப்படுகிறது.இது, புதிய முறைப்படி, சில்லரை விற்பனையாளர் களின் உர விற்பனைக்கான அத்தாட்சி ரசீதின் பேரில் மானியம் வழங்கப்படும்.உழவர்களுக்கு விற்பனை செய்யப்படும் உரம் குறித்த தகவல்களை அறியும் திட்டத்திற்கும், அமைச்சரவைக் குழு

ஒப்புதல் அளித்துள்ளது.

யூரியா விலை உயர்கிறது:மத்திய அரசு, யூரியா விலையை உயர்த்தியுள்ளது.ஒரு டன் யூரியா விலை, 50 ரூபாய் உயர்த்தப்பட்டு, 5.360 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. சில்லரை விற்ப னையில், ஒரு மூட்டை யூரியா (50 கிலோ) விலையில் 2.50 ரூபய் உயரும்.இந்த விலை உயர்வு, வரும் நவம்பர் மாதம் முதல் நடைமுறைக்கு வருகிறது.

## பட்டு வளர்ப்பு செயல்விளக்க பயிற்சி முகாம்

திருநெல்வேலி : கீழாம்பூரில் பட்டு வளர்ப்பு தொழில் செயல்விளக்க பயிற்சி முகாம் நடந்தது.கடையம் வட்டாரம் கீழாம்பூர் கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) சார்பில் பட்டு வளர்ப்பு தொழில் செயல்விளக்க முகாம் நடந்தது. கீழாம்பூர் விவசாயி ராஜகுமார் தோட்டத்தில் நடந்த நிகழ்ச்சியில் பட்டு வளர்ச்சி துறை இளநிலை ஆய்வாளர் ஆதிநாராயணன், மல்பரி நாற்று உற்பத்தி செய்யும் முறைகள், மல்பரி நடவு, தோட்டத்தில் ரசாயண உரம் இடும் முறைகள் பற்றி செயல்விளக்கம் செய்து காண்பித்தார்.வட்டார அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் இசைபிரியா, பட்டு வளர்ப்பினால் விசாயிகளுக்கு ஏற்படும் பொருளாதார மேம்பாடு குறித்தும், வட்டார வேளாண்மை அலுவலர் வளர்மதி, பட்டு வளர்ச்சி துறையில் வழங்கப்படும் மானியங்கள் பற்றியும், வட்டார துணை வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன், பயிர் பாதுகாப்பு பற்றியும் விளக்கினர்.முகாமில் உதவி வேளாண்மை அலுவலர் கமல்ராஜன், திரவியம், ஆறுமுகம், கிருஷ்ணமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப வல்லுநர்கள் சந்திரன், பொன்ஆசீர் செய்திருந்தனர்.இத்தகவலை கடையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர் தெரிவித்துள்ளார்.

## சம்பா சாகுபடி நெல் நடவுப்பணி: 6,000 ஏக்கரில் விவசாயிகள் மும்முரம்

தஞ்சாவூர்: வடகிழக்கு பருவமழை உரியநேரத்தில் பெய்ததையடுத்து, தஞ்சையில், ஆறாயிரம் ஏக்கரில் சம்பா சாகுபடி, பருவ நெற்பயிர் நடவுப்பணியில் விவசாயிகள் தற்போது மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு தாலுகாவில் சில பகுதிகள், பாபநாசம், சாலியமங்கலம், தஞ்சை தாலுகா உள்ளிட்ட கிராமப்புறங்களில், தற்போது சம்பா பருவ நெல் நடவு பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். சமீபத்தில் பெய்த வடகிழக்கு பருவமழையால் நிலங்கள் ஈரப்பதமாக உள்ளது. நெல்நடவுக்கு சாதகமாக இருக்கிறது. இதனால், தஞ்சை மாவட்ட விவசாயிகளில் ஒரு பகுதியினர்

ஆறுதலடைந்துள்ளனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க தஞ்சை மாவட்டத்தலைவர் சுகுமாரன் கூறியதாவது: வழக்கமாக, நெல் சாகுபடி பரப்பு, காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை பருவத்தில், நான்கரை லட்சம் ஹெக்டராகவும், தஞ்சை மாவட்டத்தில், ஒன்றரை லட்சம் ஹெக்டராகவும் இருக்கும்.

இதேபோல சம்பா பருவத்தில் நெல் சாகுபடி பரப்பு டெல்டா மாவட்டங்களில், 13 லட்சம் ஹெக்டராகவும், தஞ்சை மாவட்டத்தில், நான்கரை லட்சம் ஹெக்டராகவும் இருக்கும். இதன்மூலம் குறுவை சாகுபடிக்கு ஜூன், 12ம் தேதிகளில் விதை விதைத்து, ஜூலை மாதத்தில் நடவுப்பணி நடத்தப்படும். சம்பா சாகுபடிக்கு செப்., மாதம் துவங்கி, அக்.10ம் தேதி நடவுப்பணி நிறைவடைந்து விடும்.

ஆனால், நடப்பாண்டு தமிழக டெல்டா பாசன மாவட்ட பகுதிகளில், வடமேற்கு பருவமழை அறவே பொய்த்து விட்டது. மேலும் மேட்டூர் அணையில் தண்ணீர் திறப்பும் தாமதமானது. கர்நாடகா மாநில அரசும் உரிய பங்கீட்டு அளவை வழங்காமல் கைவிரித்து விட்டது. இதனால், தமிழக விவசாயிகள் பெரும் நஷ்டமடைந்தனர்.

இந்நிலையில், வடகிழக்கு பருவமழை தஞ்சையில் சில இடங்களில் பெய்துள்ளது. இதனால், ஒரத்தநாடு உள்ளிட்ட பகுதிகளில் தற்போது சம்பா பருவ நடவுப்பணியை விவசாயிகள் தமிழக அரசின் மீது மிகவும் நம்பிக்கை வைத்து, துவக்கியுள்ளோம். உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு, கர்நாடகா அரசு மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்வதை வரவேற்கிறோம். இதற்காக தமிழக அரசுக்கு பக்கபலமாக டெல்டா விவசாயிகளும் இருந்து, விவசாயிகள் சார்பிலும் கர்நாடகா அரசு மீது ஒரு நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர தீர்மானித்துள்ளோம்.

இவ்வாறு, அவர் கூறினார்.

தஞ்சை மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குனர் முகமது யாகியா கூறுகையில், ""தஞ்சை மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளில் தற்போது பெய்த வடகிழக்கு பருவமழையால், சம்பா பருவ நெல் சாகுபடியை, ஆறாயிரம் ஏக்கர் பரப்பில் விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்," என்றார்.

## இயற்கை உரங்கள் பயன்பாடு பயிற்சி

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இயற்கை உரங்களை பயன்படுத்த, கூட்டுறவு சங்கங்களின் செயலாளர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இரண்டு லட்சம் ஹெக்டேரில் நெல், பயறு வகைகள்,

சிறுதானியங்கள், எண்ணெய் வித்துப் பயிர்கள், மலர் பயிர்கள், காய்கறிப் பயிர்கள் மற்றும் பழப்பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது.

விவசாயிகளுக்கு, பயிர்களுக்கு தேவையான உரங்கள், 125 தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்படுகிறது. தற்போது, பயிர்களுக்கு இயற்கை உரங்களை பயன்படுத்தும் தொழில் நுட்பத்தை, வேளாண் துறை நடைமுறைப்படுத்தி விவசாயிகளுக்கும், வேளாண் அலுவலர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சி அளிக்கிறது.

கிருஷ்ணகிரியில், இயற்கை உரங்களை பயன்படுத்த, "கிரிப்கோ' உர நிறுவனம், கூட்டுறவுத்துறை, வேளாண் துறை மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகமும் இணைந்து, கூட்டுறவு சங்கங்களின் செயலாளர்களுக்கு சிறப்புப் பயிற்சி வகுப்பை நடத்தியது.

பயிற்சி வகுப்பில், 12 தொடக்க வேளாண் கூட்டுறவு செயலாளர்கள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு, வேளாண் பல்கலைக்கழக ஆய்வாளர்கள், பயிற்சி அளித்தனர்.

## கரூரில் தொடர் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

கரூர்: கடந்த, இரண்டு நாட்களாக கிராமப்புறங்களில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

நடப்பாண்டு கரூர் மாவட்டத்தை பொறுத்தவரை தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. தற்போது வடகிழக்கு பருவமழையை எதிர்பார்த்து, விவசாயிகள் காத்திருக்கின்றனர். ஆனால், கரூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில், கடந்த ஒரு வாரமாக கோடையை போன்று வெயில் சுட்டெரித்தது.

இந்நிலையில் கடந்த, 8ம் தேதி இரவு, கரூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் மேகமூட்டம் இருந்தது. அன்றிரவு, 9 மணியிலிருந்து, மறுநாள் காலை வரை, கரூர் மாவட்டத்தில், 478.5 மி.மீ., மழையும், சராசரியாக, 39.8 மி.மீ., மழையும் பதிவானது. மயிலம்பட்டியில் அதிகப்பட்சமாக 92.3 மி.மீ., மழை பெய்தது. தொடர்ந்து நேற்று முன்தினம் இரவும், மாவட்டத்தில் பரவலாக நல்ல மழை பெய்தது.

கடந்த, 48 மணி நேரத்தில் கரூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் பெய்த மழையளவு விபரம் (மி.மீட்டரில்):

கரூர் 42.4, அரவக்குறிச்சி 28.8, அணைப்பாளையம் 38.2, க.பரமத்தி 18.2, கிருஷ்ணாராயபுரம் 5, பஞ்சப்பட்டி 11, மாயனூர் 4.4, தோகமலை 27, கடவூர் 20.2, பாலவிடுதி 90.1, மயிலம்பட்டி 36.8 ஆகிய அளவுகளில் மழை பெய்தது. கடந்த, 8ம் தேதி இரவு முதல், நேற்று முன்தினம் காலை வரை,

கரூர் மாவட்டத்தில், 782.2 மி.மீ., மழை பெய்துள்ளது.

காவிரியாற்று பாசன பகுதிகளான குளித்தலை, கிருஷ்ணராயபுரம், கிணற்றுபாசனத்தை நம்பியுள்ள தோகமலை, கடவூர், அமராவதி ஆற்று பாசன பகுதிகளான அரவக்குறிச்சி, க.பரமத்தி உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் பரவலான மழை பெய்து வருவதால், விவசாயிகள், நெல், வாழை உள்ளிட்ட பயிர்களை பயிரிடும் பணியில் விறுவிறுப்பாக ஈடுபட்டு வருகின்றனர்.

## ரூ.48 ஆயிரத்துக்கு விலை போன சிந்து மாடு

ஈரோடு: தமிழக - கர்நாடக எல்லையில், சுமூக நிலை திரும்பியதை அடுத்து, ஈரோடு மாட்டுச்சந்தையில், கர்நாடகா வியாபாரிகளை எதிர்பார்த்து, நேற்றைய தினம், ஈரோடு வியாபாரிகள் காத்திருந்தனர்.

தமிழகத்திலுள்ள மிகப்பெரிய மாட்டுச் சந்தைகளில், ஈரோடு, கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தையும் ஒன்றாகும். வாரந்தோறும் வியாழக்கிழமை மாட்டுச்சந்தை நடக்கிறது.

மாவட்டத்தில், அந்தியூர் சந்தைக்கு அடுத்து, கருங்கல்பாளையம் சந்தைக்கு அதிகப்படியான மாடுகள் ஓட்டிவரப்படுகிறது.

சத்தி, கோபி, கவுந்தப்பாடி உள்ளிட்ட மாவட்ட பகுதிகளில் இருந்தும், பொள்ளாச்சி, பல்லடம், உடுமலை, திருச்செங்கோடு, ராசிபுரம், ஆத்தூர், மேட்டூர், மேச்சேரி ஆகிய இடங்களில் இருந்து, விற்பனைக்கு மாடுகளை ஓட்டி வருகின்றனர்.

மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட வெளிமாநிலங்கள், வேலூர், திருவண்ணாமலை, சேலம், கரூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள், மாடுகளை வாங்க, ஈரோடு சந்தைக்கு வருகின்றனர்.

வெளிமாநில வியாபாரிகளால், ஈரோடு சந்தையில் மாடுகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது.

நாட்டு மாடு, சிந்துமாடு, சோலை, ஜெர்சி மற்றும் எருமை மாடுகள் சந்தைக்கு ஓட்டி வருகின்றனர்.

நேற்றைய தினம் சந்தைக்கு, 5,500 சிந்து மற்றும் ஜெர்சி பசுக்கள், 650 எருமைகள் விற்பனைக்கு வந்திருந்தது. சிந்து பசு, 18 முதல், 48 ஆயிரம் ரூபாய் வரையும், ஜெர்சி பசு, 23 முதல், 42 ஆயிரம் ரூபாய் வரையும், எருமை மாடு, 25 முதல், 40 ஆயிரம் ரூபாய் வரை, விற்பனையானது.

சாவடிபாளையம் மாட்டு வியாபாரி சுப்புராஜ் கூறியதாவது:

ஈரோடு மாட்டுச்சந்தையில், வெளிமாநில வியாபாரிகளால், மாடுகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது. குறிப்பாக கர்நாடகா வியாபாரிகள், பெரிய சைஸ் மாடுகளை, 1.10 லட்சம் ரூபாய் வரையில், விலை கொடுத்து வாங்கிச் செல்கின்றனர். மூன்று வாரங்களாக, காவிரி நதிநீர்

பிரச்னை காரணமாக, கர்நாடகா வியாபாரிகள் சந்தைக்கு வருவது முற்றிலும் தடைபட்டு போனது.

கர்நாடகா எல்லையில், நேற்று முன்தினம் முதல், சுமூகநிலை திரும்பி, வாகனங்கள் செல்வதாக தெரிவித்தனர். கர்நாடகா வியாபாரிகள், இன்று (நேற்று) சந்தைக்கு வருவர் என காத்திருந்தோம். 12 மணி வரையிலும், ஒருவர் கூட வரவில்லை. திருவண்ணாமலை வியாபாரிகள் அதிகமாக வந்திருந்தனர்.

சிந்து மாடுகளின் விலை, முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு, 48 ஆயிரம் ரூபாய் வரை, விலைபோனது. தமிழகம் முழுவதுமாக மழை பெய்துள்ளதால், இனி வரும் வாரத்தில் மாடுகளின் விலை உயரக்கூடும் என்றார்.

## கீழ்பவானி பாசனப்பகுதிக்கு தொடர்ந்து நீர் திறப்பு :அமைச்சர்களிடம் விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

ஈரோடு: கீழ்பவானி பாசனப்பகுதிக்கு தொடர்ந்து நீர் திறக்க வேண்டும் என, கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கம், அமைச்சர்களிடம் மனு அளித்துள்ளது.

கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்க தலைவர் நல்லசாமி, மின்சாரத்துறை அமைச்சர் நத்தம் விஸ்வநாதன், பொதுப்பணித்துறை அமைச்சர் ராமலிங்கத்திடம் வழங்கியுள்ள மனுவில் கூறியதாவது:

தமிழகத்தில் மேட்டூர் அணைக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய நீர்த்தேக்கமாக இருப்பது கீழ்பவானி அணை. இன்றைய தேதியில், 33.4 அடி நீர், கொள்ளளவு, 1.5 டி.எம்.சி., நீர் வரத்து, 3,800 கனஅடி.

இந்தாண்டு பவானி ஆற்றிலிருந்து பாசனம் பெறும் கொடிவேரி பாசனம் முழுமையான பாசனம் பெற்று விட்டது. காலிங்கராயன் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அட்டவணைப்படி ஆகஸ்ட், 15ல் கீழ்பவானி பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டிருக்க வேண்டும். பருவமழை குறைவு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. தற்போது பாசன பகுதியெங்கிலும் குடிநீர் தட்டுப்பாடு வந்துள்ளது. தென்னை மரங்கள் காய்ந்து குருத்துக்கள் சாயும் நிலையில் உள்ளன. இவைகளுக்காக கீழ்பவானி அணையில் இருந்து ஒரு பகுதிக்கு, 15 நாள் உயிர்த் தண்ணீரும், மறுபகுதிக்கு, 15 நாள் உயிர்த் தண்ணீரும் விட முடிவெடுத்து, அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

செப்டம்பர், 17 முதல் அக்டோபர், 2 வரையில் தண்ணீர் திறக்கப்பட்டது. 15 நாட்களுக்கு விடுவதாக சொல்லி, எட்டு நாட்களுக்கு மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தற்போது

தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது.
மதகு மாற்றுவதற்காக ஏழு நாட்கள் இடைவெளி விட்டு, 10ம் தேதி தண்ணீர் விடாத மறுபகுதிக்கு தண்ணீர் விடப்பட்டிருக்க வேண்டும். அணையில் இதற்கான தண்ணீர் இல்லாத காரணத்தால், அரசு உத்தரவுபடி தண்ணீர் விட முடியவில்லை.
மேற்கு தொடர்ச்சி மலையில் பவானி ஆறு நீர்ப்பிடிப்பு பகுதியில் பல மின் அணைகள் உள்ளன. மின் அணைகளில் இருந்து அரசு உத்தரவுபடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணை நீர் மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.
மின் அணைகளிலிருந்து உடனடியாக இறக்கப்பட்ட தண்ணீர் தேவையான அளவு அணையில் தேங்கிய பிறகு, தலைமை கால்வாயில் தண்ணீர் திறக்க வேண்டும். அரசு ஆணைகளின்படி, கீழ்பவானி பாசனத்துக்கு தலைமை கால்வாயின் முழு கொள்ளளவான, 2,350 கன அடி வீதம், 15 நாட்களுக்கு முழுமையாக தண்ணீர் வழங்கப்பட வேண்டும்.
இந்த உயிர்த் தண்ணீர் வழங்கப்பட்ட பிறகு, அரசு ஆணை எண்: 329ன் படி மின் அணைகளிலிருந்து பெறப்படும் நீர், கீழ்பவானி பாசன நீராக தொடர்ந்து விடப்பட வேண்டும். இவ்வாறு அதில் கூறியுள்ளனர்.
பாதாள சாக்கடை திட்டம் குறித்த கருத்து கேட்பு:கழிவு நீர் தொட்டி அமைக்க மக்கள் எதிர்ப்பு
பவானி: பவானி நகராட்சியில் பாதாள சாக்கடை திட்ட கழிவுநீர் தொட்டி அமைக்க, குரும்பநாயக்கன்பாளையம் பகுதியினர் எதிர்ப்பு தெரிவித்து, கருத்து கேட்பு கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.
பவானி நகராட்சியில் உள்ள, 27 வார்டுகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் ஒரு புறம் பவானி ஆற்றிலும், மறுபுறம் காவிரி ஆற்றிலும், வடிகால் மூலம் நேரடியாக ஆற்றில் கலக்கிறது. காவிரி ஆற்றில் கழிவு நீர் கலப்பதை தவிர்க்கும் விதமாக, பவானியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த தமிழக அரசு உத்தரவிட்டது. கழிவுநீரை விடுவதற்கு, பவானி நகராட்சி பகுதியில் இடமில்லை.
தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்டம் மூலம் பவானிக்கான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க கடந்த சில மாதங்களுக்கு முன், பவானி, ஊராட்சிகோட்டையில் உள்ள விதைபண்ணை இடத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டு, கட்டிட பணிகள் துவங்கி, அப்பகுதியினர் எதிர்ப்பால் நிறுத்தப்பட்டது.
இந்நிலையில், பவானி நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்றுவது குறித்த, கருத்து கேட்பு கூட்டம் நடந்தது. தலைவர் கருப்பணன், ஆணையர் ராஜேஸ்வரி, பொறியாளர்

குணசேகரன், துப்புரவு ஆய்வாளர் பேச்சிமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
கூட்டம் துவங்கியதும், குருப்பநாயக்கன்பாளையம் பகுதியினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து, கருத்துக்களை பதிவு செய்துவிட்டு, கூட்டத்தை விட்டுவெளியேறி ஆர்ப்பாட்டம் செய்தனர்.
அம்மக்கள் கூறுகையில், "கிராமத்தில், 500க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறோம். அங்கு வேளாண் பண்ணை உள்ளது. அங்கு விவசாயம், குடிநீர், நிலத்தடி நீர் பாதிக்கும். மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் பல விதமான நோய் தாக்கும். இதனால், வேறு பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்க வேண்டும்,' என்றனர்.
பவானி நகராட்சி தலைவர் கருப்பணன் கூறுகையில், ""குருப்பநாயக்கன்பாளையம் பகுதி மக்கள் தங்கள் கருத்தை தெரிவித்துள்ளனர். பவானி பகுதியில் இடம் உள்ளதா? என அதிகாரிகள் மூலம் அறிந்து அரசுக்கு அனுப்புவோம். பவானி பகுதியில் இடம் தேர்வு செய்யப்பட்டால், பவானியில் கழிவு நீர் தொட்டி அமைத்து, திட்டம் நிறைவேற்றப்படும்," என்றார்.
பவானி அ.தி.மு.க., நகர செயலாளர் கிருஷ்ணராஜ், காங்கிரஸ் வட்டார தலைவர் பூபதி, ம.தி.மு.க.. நகர செயலாளர் அறிவழகன், குருப்பாநாயக்கன் பாளையம் பஞ்சாயத்து தலைவர் விஜயலட்சுமி, ஊர் கவுண்டர் நந்திஈஸ்வரன், பெங்களூரு தனியார் நிறுவன கட்டுமான பொறியாளர் மன்மோகன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## மழையால் வெம்பக்கோட்டை அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு..

சிவகாசி: மழையால் வெம்பக்கோட்டை அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ள நிலையில், சிவகாசி பகுதி குடிநீர் தட்டுப்பாட்டுக்கு வழிபிறந்துள்ளது.சிவகாசி, திருத்தங்கல் நகராட்சிகளுக்கு, மானூர் கூட்டு குடிநீர் திட்டம் மூலம், தினமும் 50 லட்சம் லிட்டர் நீர் பெறப்பட்டது. குடிநீர் எடுக்கும் பழவூர் ஆற்றுப்படுகையில் உள்ள, 13 கிணறுகளுக்கு செல்லும் மின் லைன் எரிந்ததால், குடிநீர் பெறமுடியாத நிலை உருவானது. மின் லைன் பழுது நீக்கும் பணியினை, குடிநீர் வடிகால் வாரியத்தினர் மேற்கொண்டு, 6 கிணறுகளிலிருந்து முழு அளவில் குடிநீர் பெறும் நிலை உருவானது. இதனால் ஒருநாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழங்கப்பட்டது. குடிநீர் பெறுவதில், மேலும் சிக்கல் ஏற்படுத்தும் வகையில், செவல்பட்டியில் உள்ள மின் டிரான்ஸ்பாம் திடீரென வெடித்து பழுதானது. இதனால் ,குடிநீர் வருவதில் பின்னடைவு ஏற்பட்டது.வெம்பக்கோட்டை அணை உறைகிணறுகளில் இருந்து பெறப்பட்ட, 10 லட்சம் லிட்டர் நீரும், மழையின்மையால் 3 லட்சம் லிட்டர் நீராக குறைந்தது. இதனால் நகரில் குடிநீர் தட்டுப்பாடு கடுமையானது.நிலைமையை சமாளிக்க,நகராட்சி நிர்வாகம் , வெம்பக்கோட்டை அணை நீர்,

தனியார் கிணறுகள்மூலம், நான்கு லாரிகளில் தண்ணீர் பெற்று வினியோகித்தது. இதனால் குடிநீர் வினியோகம் 12 நாட்களுக்கு ஒருமுறையாகமாறியது.இதனிØடையே,வெம்பக்கோட்டை அணையில், சில நாட்களுக்கு முன், நகராட்சி தலைவர், கவுன்சிலர்கள் மழைவேண்டி பிராத்தனை செய்தனர். எவ்வளவு கடும் வறட்சி ஏற்பட்டாலும், புரட்டாசி மூன்றாவது வாரத்தையொட்டி, மழை வரும் என்ற

நம்பிக்கை, நகராட்சி அதிகாரிகளிடம் இருந்தது. இது மெய்யாக்கும் வகையில், வெம்பக்கோட்டை அணை பகுதியில், கடந்த 7ம்தேதி இரவு 39.4 மி.மீட்டரும், 8ம்தேதி 12.5 மி.மீட்டர்மழை பெய்தது. இதனால் இங்கு நீர் வரத்து அதிகிரத்துள்ளது.இதை சுற்றிய கிணறுகளின் நீர் வரத்திலும் முன்னேற்றம் ஏற்பட்டது. இதனால், அணையில் இருந்து தினம் 11 லட்சம் லிட்டர்பெறப்பட்டது. பழுதடைந்த மின்டிரான்ஸ்பார்மர் சீரமைக்கப்பட்டது. இதை தொடர்ந்து ,மானூர் குடிநீர் திட்டம் மூலம் 20லட்சம் லிட்டர் நீர் வழங்கப்பட்டுள்ளது. நீர் வரத்தால் ஒரே நாளில்மூன்று பகுதிகளுக்கு, குடிநீர் வினியோகிக்கப்பட்டது. இதைதொடர்ந்து, சிவகாசியில் குடிநீர் தட்டுப்பாடு படிப்படியாக சீராகி வருகிறது. இதானல் பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## ஸ்ரீவி., ராஜபாளையத்தில் ஒரேநாளில் 70 மி.மீ., மழை:மக்கள் மகிழ்ச்சி

சிவகாசி:ஸ்ரீவி., ராஜபாளையத்தில் ஒரேநாளில் 70 மி.மீ.,மழை பெய்ததால், மக்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.தென்மேற்கு பருவமழை பொய்த்தால் ,சிவகாசி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதி களில், தொடர் மின்தடை, வெயில் தாக்கம் போன்றவற்றால், மக்கள் புழுங்கினர். எப்போது மழை பெய்யும் என்ற எதிர்பார்ப்பில் இருந்த நிலையில்,கடந்த 8ம்தேதி முதல் மாவட்டத்தில், வட கிழக்கு பருவமழை பரவலாக மழை பெய்து வருகிறது.இதனால் சிவகாசி பகுதியில் வெப்பம் தணிந்து, குளிர் காற்று வீசுகிறது. கடந்த 8 முதல் நேற்று(செப்..11)வரை மழை அளவு விபரம் மி.மீ.,ல் :செப்., 8: சிவகாசி 68.6 , ஸ்ரீவில்லிபுத்தூர் 22.5, சாத்தூர் 5, ராஜபாளையம் 20 , பிளவக்கல் 3.2 , வத்ராயிருப்பு 6 , வேம்பக்கோட்டை 15 .செப்., 9: பிளவக்கல் 12.8 , வத்ராயி ருப்பு , வெம்பக்கோட்டை 12.5 .செப்.,10:சிவகாசி 4 , ஸ்ரீவில்லிபுத்தூரில் 5.2 , பிளவக்கல் 32 .செப்.,11: சிவகாசி 30.8 , ஸ்ரீவில்லிபுத்தூர் 70 , ராஜபாளையம் 70 , பிளவக்கல் 42.4. , வத்ராயிருப்பு 24 . இதில் சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் 70 பகுதியில் அதிகபட்சமாக 70 மி.மீ., வரை மழை பதிவாகி உள்ளது.

## பொதுப்பணித்துறை, பஞ்., ஒன்றிய குளங்களில்விவசாயிகள் இலவசமாக கரம்பை மண் அள்ளி கொள்ளலாம்

தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்டத்தில் பொதுப்பணித்துறை மற்றும் பஞ்., ஒன்றிய குளங்களில் இருந்து இலவசமாக கரம்பை மண் அள்ளிக் கொள்ள மாவட்ட கலெக்டர் ஆஷீஷ்குமார் அனுமதி வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து கலெக்டர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது; தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு பொதுப்பணித்துறை மற்றும் பஞ்., ஒன்றிய குளங்களில் இருந்து இலவசமாக கரம்பை மண் அள்ளுவதற்கு கலெக்டர் மூலம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மழைகாலம் நெருங்கி விட்டபடியால் இந்த உத்தரவினை நடைமுறைப்படுத்த உரிய கால அவகாசம் இல்லை. இதனால் இந்த பருவத்திற்கு மட்டும் விவசாயிகள் அந்தந்த பகுதி கிராம நிர்வாக அலுவலர்களிடம் கோரிக்கை மனு கொடுத்து அந்தந்த கிராம குளங்கள் அல்லது அருகில் உள்ள கிராம குளங்களில் கரம்பை மண் இலவசமாக அள்ளிக்கொள்ள கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படுகிறது.

* கிராம நிர்வாக அலுவலர்கள் (வி.ஏ.ஓ) வரப்பெற்ற கோரிக்கை மனுக்களை தனிப்பதிவேட்டில் பதிவு செய்து உரிய அனுமதி விவசாயிகளுக்கு அளித்து அந்த விபரத்தினை அந்தந்த கிராம குளங்கள் எந்த துறைக்கு பாத்தியப்பட்டதோ அந்த துறைக்கு உடனடியாக தெரிவிக்க வேண்டும்.
* விவசாயிகள் தங்களது கிராமத்தில் குளம் இல்லாத பட்சத்தில் அருகில் உள்ள கிராமத்தில் உள்ள குளங்களில் கரம்பை மண் அள்ளி கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது.
* கிராம நிர்வாக அலுவலர்கள் இலவசமாக கரம்பை மண் கொண்டு செல்லும் டிராக்டரின் எண் குறிப்பிடப்பட்டு அனுமதி வழங்கப்பட வேண்டும்.
*அனுமதிக்கப்பட்ட குளத்தில் இரண்டு அடி ஆழத்திற்கு மேல் கரம்பை மண் வெட்டி எடுக்கப்பட்டாலோ அல்லது கரம்பை மண் தவிர மண், மணல் சரள் போன்ற கனிமங்கள் வெட்டி எடுக்கப்பட்டாலோ அல்லது மாட்டு வண்டி, டிராக்டர் தவிர பிற வாகனத்தில் எடுத்துச் சென்றாலோ 1959ம் ஆண்டு தமிழ்நாடு சிறுகனிம விதிகள் விதி எண் 36ஏ ன் படி அபராத நடவடிக்கைமேற்கொள்ளப்படும். இந்த உத்தரவு நடப்பு பருவத்திற்கு மட்டும் பொருந்தும். எதிர் வரும் காலங்களில் இந்த நடைமுறையை ஒரு முன் உதாரணமாக எடுத்துக் கொள்ள இயலாது. இந்த உத்தரவுப்படி கரம்பை மண் தேவைப்படும் விவசாயிகள் அனைவரும் அந்தந்த கிராம நிர் வாக அலுவலர்களிடம் ம னு அளித்து அனுமதி பெற்று கரம்பை மண் அள்ளிக் கொ ள்ளலாம். இவ்வாறு கலெக்டர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## **தென்காசியில் கன மழை பொதுமக்கள் மகிழ்ச்சி**

தென்காசி : தென்காசியில் நேற்று திடீரென பெய்த கன மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

தென்காசி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த சில மாதங்களாக போதிய மழை பெய்யவில்லை. தென்மேற்கு பருவமழையும் பொய்த்து விட்டதால் விவசாயிகள் கார்சாகுபடி செய்ய முடியாமல் கவலையடைந்தனர். மழை புறக்கணித்ததாலும் கடுமையான வெயில் காரணமாகவும் வறட்சி தாண்டவமாடியது. குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. பல இடங்களில் குடிநீர் பணம் கொடுத்து வாங்கி செல்லும் நிலை உருவானது.

இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக மாலை நேரத்தில் மழை மேக கூட்டங்கள் சூழ்ந்து காணப்பட்டது. ஆனால் மழை பெய்யாமல் ஏமாற்றியது. பல இடங்களில் பொதுமக்கள் மழைவேண்டி சிறப்பு வழிபாடு நடத்தினர். தென்காசி பெருமாள் கோயிலில் மழைக்காக பெண்கள் சிறப்பு பிரார்த்தனை நடத்தினர்.

இச்சூழ்நிலையில் நேற்று மாலையில் திடீரென மழை மேக கூட்டங்கள் சூழ்ந்து மழை பெய்ய துவங்கியது. சுமார் ஒரு மணி நேரம் கன மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. நீண்ட நாட்களுக்கு பின் கன மழை பெய்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். தென்காசி சுற்று வட்டார பகுதியிலும் இம்மழை நீடித்தது. பொதுமக்கள் தங்கள் வீடுகள், கட்டடங்களின் கூரை பகுதியில் இருந்து விழுந்த மழை நீரை குடங்கள், பாத்திரங்களில் பிடித்து நிரப்பினர். இதனை வைத்து குடிநீர் பிரச்னையை ஓரிரு நாட்களுக்காவது சமாளிக்கலாம் என பொதுமக்கள் கூறினர்.

## நெல்லையில் இடி மின்னலுடன் மழை கொட்டியது

திருநெல்வேலி : கோடையை மிஞ்சும் வகையில் அடித்த வெயிலுக்கு "குட்பை' சொல்லிவிட்டு, வட கிழக்கு பருவமழையை பொதுமக்கள் "வெல்கம்' சொல்லி மகிழ்கின்றனர்.நெல்லையில் கடந்த சில மாதங்களாக கோடையை மிஞ்சும் அளவில் வெயில் கொளுத்தியது. இதனால் ஆறு, குளம், கால்வாய்கள் தண்ணீர் இல்லாமல் வறண்டன. வெயில் கொடுமை ஒருபக்கம்...மின்தட்டுப்பாடு ஒருபக்கம் என புழுக்கத்தில் மக்கள் கடும் அவதிப்பட்டனர். தென் மேற்கு பருவமழை ஏமாற்றியதால், வட கிழக்கு பருவமழையாவது பொழியாதா என மக்கள் ஏங்கினர்.இதற்கு ஒரே தீர்வு மழை பொழிய வேண்டும் என கோயில்கள், சர்ச்சுகள், மசூதிகளில் சிறப்பு பிரார்த்தனைகள் செய்தனர். அவர்களின் பிரார்த்தனைகளுக்கு பலனாக கடந்த மூன்று தினங்களாக நெல்லை மாவட்டத்தில் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது.நெல்லையில் நேற்று சுமார் 3.30


மணியளவில் பயங்கர இடி, மின்னலுடன் மழை பெய்யத்துவங்கியது. சுமார் ஒன்றரை மணிநேரம் பெய்த பலத்த மழையால் தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கியது.தத்தளித்த தபால் அலுவலகம்:நெல்லை ஸ்ரீபுரம் அருகே மழைநீர் வெளியேற வழியில்லாமல் மேம்பாலம் கீழ் பகுதியில் குளம் போல் தேங்கியது. நெல்லை ஜங்ஷனில் இருந்து டவுன் வழியாக சென்ற அனைத்து வாகனங்களும் மழைநீரில் தத்தளித்தபடியே ஊர்ந்து சென்றன. அதே நேரத்தில் மழைநீர் ஸ்ரீபுரம் தபால் அலுவலகத்திற்குள் சென்றது. இதனால் பணியில் இருந்த ஊழியர்கள் முட்டு அளவு தண்ணீரில் இறங்கி வெளியே வந்தனர்.இதுபோல் நெல்லையப்பர் கோயிலில் சுவாமி சன்னதி பிரகாரத்தில் மழைநீர் புகுந்தது. கோயிலுக்கு சென்ற பக்தர்கள் தண்ணீரில் நனைந்தபடி சுவாமி தரிசனம் செய்ய சென்றனர்.தீப்பிடித்தது பனைமரம்:மின்னல் தாக்கியதில் நெல்லை ஜங்ஷன் ஸ்ரீபுரம் வயல் பகுதியில் நின்ற பனை மரம் ஒன்று தீப்பிடித்து எரிந்தது. அருகில் இருந்த மின்வயர்கள் தீப்பிடித்ததால் உடனடியாக மின்சாரமும் துண்டிக்கப்பட்டது.மின்கம்பி சேதம்:>நேற்று பெய்த பலத்த மழையில் கொக்கிரகுளம் அறிவியல் மையத்தில் உள்ள பழைய மரம் ஒன்று வேரோடு சாய்ந்து மாவட்ட முதன்மை கல்விஅலுவலகத்தில் உள்ள மின்கம்பத்தில் சாய்ந்தது. மின்கம்பி அறுந்து விழுந்தது. மின்தடையும் ஏற்பட்டது. இதையடுத்து மின்வாரிய அதிகாரிகள் கொக்கிரகுளம் சப்டிவிஷனில் இருந்து மின்விநியோகம் செய்யப்படும் ஜங்ஷன் மற்றும் சுற்றுவட்டார பகுதிக்கு பாளை.,சப் டிவிஷனில் இருந்து மின்விநியோகம் செய்யப்பட்டது.குளிர்ச்சியில் மக்கள்:கடந்த ஓரிரு மாதங்களாக இரவு நேர மின்வெட்டினால் இரவு நேர தூக்கத்தை தொலைத்த மக்கள். மழை பொழியாதா என ஏங்கினர். இந்நிலையில் நேற்று சுமார் ஒன்றரை மணிநேரம் பலத்த மழை பெய்து பூமி குளிர்ந்தது. இதமான குளிர்ந்த காற்று வீசுவதால் மக்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். கோடையை மிஞ்சும் வகையில் அடித்த வெயிலுக்கு மக்கள் "குட்பை' சொல்லிவிட்டு, பருவமழையை "வெல்கம்' கூறி மக்கள் மகிழ்ந்தனர். இந்த மழை தொடர்ந்து பெய்ய வேண்டும் என கோயில்களில் பக்தர்கள் பிரார்த்தனை செய்தனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

11.10.2012 P.M

12.10.2012 A.M

## உரங்களுக்கான மானிய முறை மத்திய அரசு அதிரடி மாற்றம்




புதுடெல்லி : உர நிறுவனங்களுக்கு மானியம் வழங்கும் முறையை மத்திய அரசு அதிரடியாக மாற்றியுள்ளது. பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழுக் கூட்டம் டெல்லியில் நேற்று நடந்தது. இதில் உரங்களு க்கான மானிய முறையை மாற்றும் திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதன்படி, உர நிறுவனங்கள் அளிக்கும் பில் மற்றும் சில்லரை வர்த்தகர்கள் உரங்களை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் கடிதம் ஆகியவற்றை சமர்ப்பித்த பின்புதான் மானியம் அளிக்கப்படும். தற்போது, உர நிறுவனங்கள், விற்பனையாளர்களுக்கு அனுப்பிய பில்களை மட்டுமே சமர்ப்பி த்து மானியம் பெறுகின்றன. விவசாயிகளுக்கு உரங்கள் சென்று சேர்வதை உறுதி செய்யும் விதத்தில் புதிய முறைக்கு அமைச்சரவை குழு கூட்டத்தில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாடு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 மாவட்டங்களில், விவசாயிகளுக்கு உரங்கள் விற்பதை வெளிப்படையானதாக ஆக்கும் வகையிலான புதிய திட்டத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி, விவசாயிகளின் கிசான் கிரெடிட் கார்டு, ஆதார் எண், வங்கி கணக்கு எண் ஆகியவற்றின் அடிப்படையில் மொபைல் போன் மூலம் இலவச பதிவு மையத்துக்கு விவசாயி மூலமே எஸ்.எம்.எஸ். அனுப்பப்படும். இதனால் எந்த விவசாயி, எவ்வளவு உரத்தை

வாங்கியுள்ளார் என்ற தகவலை சில நிமிடங்களில் பதிவு மையத் தில் இருந்து தெரிந்து கொள்ள முடியும்.


## முட்டை விலை 5 காசு உயர்வு



நாமக்கல் : நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடந்தது. இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 310 காசுகளாக இருந்த முட்டை விலை யில் 5 காசுகள் உயர்த்தி ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 315 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டது.
கடந்த வாரம் முட்டை விலையில் 45 காசுகள் வரை குறைக்கப்பட்டது.

இதையடுத்து, முட்டை விற்பனை சற்று உயர்ந்துள்ளது. இதனால், கொள்முதல் விலையில் 5 காசு உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.
ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.53, ஒரு கிலோ கறிக்கோழி ரூ.60 ஆகவும் விலை நிர்ணயிக்கப்பட்டது.

## தமிழகத்துக்கு 8.8 டிஎம்சி தண்ணீர்



புதுடெல்லி : காவிரியில் தமிழகத்துக்கு அக்டோபர் 15ம் தேதி முதல் 31ம் தேதி வரை 8.8 டிஎம்சி தண்ணீர் திறந்து விடும்படி கர்நாடகாவுக்கு காவிரி கண்காணிப்பு குழு உத்தரவிட்டுள்ளது. டெல்லியில் கடந்த 19ம் தேதி நடந்த காவிரி நதிநீர் ஆணைய கூட்டத்தில், 'செப்டம்பர் 20 முதல் அக்டோபர் 15ம் தேதி வரை தமிழகத்துக்கு தினமும் வினாடிக்கு 9 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்து விட வேண்டும்' என்று கர்நாடகாவுக்கு பிரதமர் உத்தரவிட்டார்.

இதை கர்நாடக அரசு ஏற்கவில்லை. இதையடுத்து, உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது. பிரதமர் உத்தரவை அமல்படுத்தும்படி உச்ச நீதிமன்றம் எச்சரித்த பின், செப்டம்பர் 29ம் தேதி முதல் கர்நாடக அரசு தண்ணீர் திறந்து விட்டது. கடந்த 8ம் தேதி அதை நிறுத்தியது.

இந்நிலையில், டெல்லியில் மத்திய நீர் வளத்துறை செயலாளர் துருவ் விஜய் சிங் தலைமையில் காவிரி கண்காணிப்பு குழு கூட்டம் நேற்று நடந்தது. இதில், தமிழக தலைமைச் செயலாளர் தேபேந்திரநாத் சாரங்கி, பொதுப்பணித் துறை செயலாளர் சாய்குமார், கர்நாடக தலைமை செயலாளர் எஸ்.வி.ரங்க நாத் மற்றும் கேரளா, புதுவை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதில், சம்பா பயிரை காப்பாற்ற தினமும் 2 டிஎம்சி தண்ணீரை திறந்து விடும்படி தமிழக அதிகாரிகள் வலியுறுத்தினர். ''தமிழகத்துக்கு தேவையான தண்ணீரை திறந்து விட்டு விட் டோம். கர்நாடக அணைகளில் போதுமான அளவுக்கு தண்ணீர் இல்லை' என்று கர்நாடக அதிகாரிகள் கூறினர். பின்னர், ''அக்டோபர் 15 முதல் 31ம் தேதி வரை தமிழகத்துக்கு 8.8 டிஎம்சி (ஒரு டிஎம்சி 100 கோடி கனஅடி) தண்ணீரை திறந்து விட வேண்டும்'' என்று கர்நாடகாவுக்கு குழுவின் தலைவரான துருவ் விஜய் சிங் உத்தரவிட்டார். இதை கர்நாடக அதிகாரிகள் ஏற்கவில்லை.

இந்நிலையில், தமிழகத்துக்கு தண்ணீர் திறப் பதை நிறுத்திய கர்நாடக முதல்வர் ஷெட்டர் உட்பட 7 பேர் மீது அவமதிப்பு நடவடிக்கை எடுக்கும்படி உச்ச நீதிமன்றத்தில் தமிழகம்  தொடர்ந்த வழக்கு இன்று விசாரணைக்கு வருகிறது.

11th oct 2012 P.M

**நடப்பு சம்பா பருவத்தில் திருந்தியநெல் சாகுபடி மூலம் உற்பத்தியை அதிகரிக்கலாம்**

திருக்கோவிலூர், : நடப்பு சம்பா பருவத்தில் திருந்திய நெல் சாகுபடி மூலம் உற்பத்தியை அதிகரிக்கலாம் என்று இணை இயக்குனர் தெரிவித்துள் ளார்.

திருக்கோவிலூர் அருகே முகையூர் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் விழா நடைபெற்றது. வேளாண் இணை இயக்குனர் சேகர் தலைமை தாங்கினார். துணை இயக்குனர் அன்பழகன், ஒன்றியகுழு தலைவர் துளசி ராஜா, மாவட்ட கவுன்சிலர் தங்கராசு, ஆத்மா திட்ட தலைவர் கங்காதரன் ஆகி யோர் முன்னிலை வகித்தனர். உதவி இயக்குனர் கென்னடிஜெபக்குமார் வரவேற்றார்.

பின்னர் இணை இயக்குனர் சேகர் கூறியதாவது, நெல்லில் உற்பத்தி திறனை அதிகரித்திட முக்கியமான தொழில்நுட்பம் திருந்திய நெல்சாகுபடி திட்டம். இந்த திருந்திய நெல்சாகுபடியில் ஏக்கருக்கு 2 முதல் 3 கிலோ விதை போதுமானது. ஏக்கருக்கு ஒரு சென்ட் நாற்றங்கால் 16 முதல் 18 நாட்கள் வயதுடைய இளம்நாற்றுகள் முக்கால்அடி இடைவெளி யில் வரிசையாக நடவு செய்து களைகளை எடுத்திடவும், கோனோ வீடர் அல்லது இயந்திரத்தால் இயங்கிடும் பவர்வீடம் மூலம் களை எடுக்கப்படுகிறது.

தண்ணீர் சீராக வடிந்து விடுகிறது. திருந்திய நெல்சாகுபடி தூர்தல் அதிகம் வெடித்து மகசூல் 20முதல் 40 சதவிகிதம் வரை அதிகரிக்கிறது. விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 2 ஆயிரம் முதல் 2500வரை நடவு செலவு குறைகிறது. நடப்பு சம்பா பருவத்தில் வட்டாரத்துக்கு 6 கிராமங்கள் திருந்திய நெல் சாகுபடி திட்டத்தின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருந்திய நெல்சாகுபடி திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் திருந் திய நெல் சாகுபடி செய்திடும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் எக்டருக்கு ரூ.3 ஆயிரம் என்ற மானியத்தில் விதைகள், உயிர்உரங்கள், நுண்ணூட்டங்கள், வழங்கப்படும். முழு கிராம திருந்திய நெல் சாகுபடி திட்டத்தில் பங்கு பெறும் கிராமங்களில் உள்ள விவசாய குழுக்களுக்கு களை எடுக்கும் கருவி, 100 சதவிகிதம் மானியத்திலும், வழங்கப்படும்.

முகையூர் வட்டார விவசாயிகள் நடப்பு சம்பா பருவத்தில் பெருமளவில் திருந்திய நெல்சாகுபடி செய்து உற்பத்தியை அதிகரிக்க வருவாயை பெருக்கிட வேண்டும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொண்டு

பயன் பெறலாம் என்றார்.

விழாவில் வீரங்கிபுரம், வேடாளம், சொரையப் பட்டு, ஜம்பை, சென்னகுணம் கிராம விவசாயிகளுக்கு இடுபொருட்கள் முழு மானியத்தில் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை துணை வேளாண்மை அலுவலர் புகழேந்தி, ஆத்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார், உதவி வேளாண்மை அலுவலர்கள் சிவநேசன், வெங்கடகிருஷ்ணன், திருமலை, செந்தில்குமார், சிவக்குமார், வெங்கடேசபெருமாள் ஆகி யோர் செய்திருந்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**12.10.2012 A.M**

**கரும்பு அரவைக்காலம் தொடங்க உள்ளது**
**விவசாயிகள் தடையில்லா சான்று பெற வி ண பிக்க வே டும்**
**கலெக்டர் தகவல்**

வேலூர், அக்.12–

வேலூர் மாவட்டத்தில் கரும்பு அரவைக்காலம் தொடங்குவதையொட்டி விவசாயிகள் தடையில்லா சான்று பெற வி ண பிக்க வே டும் என்று கலெக்டர் தெரிவித்துள்ளார்.

கரும்பு விவசாயிகள்

வேலூர் மாவட்டத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளில், நட பு ஆ டிற்கான கரும்பு அரவைக்காலம் தொடங்க உள்ளது. கூட்டுறவு, அரசு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் அவற்றின் 100 சதவீத பிழிதிறனை அடைந்திட, வரையறுக்க பட்ட பகுதிகளின் பதிவு செய்ய படாத வயல்களிலிருந்து கரும்பை கொள்முதல் செய்திட கரும்பு கட்டு பாடு சட்டம் 1966–ன்படி அனுமதி வழங்க பட்டுள்ளது.

கூட்டுறவு, அரசு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் அவர்களுக்கு வரையறுக்க பட்ட பகுதிகளின் பதிவு செய்ய படாத வயல்களிலிருந்து கரும்பை கொள்முதல் செய்ய விரும்பாத பட்சத்தில், விவசாயிகள் மாவட்டத்திற்குள் அல்லது மாநிலத்திற்குள் வரையறுக்க பட்ட சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பை வழங்கிவிடலாம். ஆனால் அவ்வாறு வழங்குவதற்கு முன் சம்பந்த பட்ட சர்க்கரை ஆலையிடமிருந்து தடையில்லாசான்றை பெற வே டும்.

வி ண பிக்க வே டும்

தடையில்லாச்சான்று பெற விரும்பும் விவசாயிகள், சம்பந்த பட்ட சர்க்கரை ஆலைகளிடம் வி ண பம் அளிக்க வே டும். வி ண பம் கிடைக்க பெற்ற 14 தினங்களுக்குள் சர்க்கரை ஆலைகள் தடையில்லாசான்று வழங்கும். அவ்வாறு கிடைக்க பெறாத பட்சத்தில் விவசாயிகள் கரும்பு ஆணையாளருக்கு வி ண பம் அளித்து, தடையில்லா சான்று பெற்று கொள்ளலாம்.

தடையில்லா சான்று இல்லாமல் ஒரு சர்க்கரை ஆலையின் வரையறுக்க பட்ட பகுதியிலிருந்து கரும்பை மாவட்டத்திற்குள் அல்லது மாநிலத்திற்குள் அமைந்துள்ள வேறு ஒரு சர்க்கரை ஆலைக்கு எடுத்து செல்வது தடை செய்ய பட்டுள்ளது.

இவ்வாறு கலெக்டர் சங்கர் தெரிவித்துள்ளார்.

**மஞ்சள் குவி டாலுக்கு ரூ.10 ஆயிரம் வழங்க வே டும்**
**சங்கமம் உழவர் சங்க கூட்டமை பு கோரிக்கை**

பவானி, அக்.12 –

மஞ்சள் குவி டாலுக்கு ரூ.10 ஆயிரம் வழங்க வே டும் என்று சங்கமம் உழவர் சங்க கூட்டமை பு கோரிக்கை விடுத்துள்ளது.

கருத்தரங்கம்

பவானி அருகே லட்சுமிநகரில் உள்ள தனியார் திருமண ம டபத்தில் சங்கமம் உழவர் சங்க கூட்டமை பின் சார்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கூட்டமை பின் தலைவர் பரமேஸ்வரன் தலைமை தாங்கினார். நிர்வாகக்குழு உறு பினர்கள் பழனிச்சாமி, வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்கத்தின் துணைத்தலைவர் வெற்றிவேல் வரவேற்றார்.

இயற்கை உரங்கள்

நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் ச முகம் கலந்து கொ டு கருத்தரங்கை தொடங்கி வைத்தார். அ போது அவர் கூறியதாவது –

இயற்கை உரங்களை பயன்படுத்த விவசாயிகள் முன்வந்துள்ளது வரவேற்க கூடியதாகும். இதை அனைத்து விவசாயிகளும் கடைபிடிக்க வே டும். அவ்வாறு செய் ம்போது ம வளம் காக்க படும். விவசாயம் பெருகும். அரசின் மூலம் நிறைவேற்ற படும் திட்டங்களை விவசாயிகள் சரியாக பயன்படுத்தி கொள்ள வே டும்.

இவ்வாறு மாவட்ட கலெக்டர் ச முகம் பேசினார்.

கருத்தரங்கில் நிறைவேற்ற பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

ரூ.10 ஆயிரம் வழங்க வே டும்

தற்போது நிலவும் மின்தட்டு பாட்டுக்கு மாற்றாக சூரியமின்சக்தி மூலம் மின்மோட்டார்களை இயக்க 100 சதவீத மானியம் வழங்க வே டும்.

மஞ்சள் விலை ஒரு குவி டாலுக்கு ரூ.10 ஆயிரம் வழங்க வே டும்.

கரும்பில் இருந்து எத்தனால் தயாரிக்க அரசு ஆவன செய்ய வே டும்.

கிராம புறங்களில் சமையல் எரிவா தட்டு பாட்டை போக்க சாணஎரிவா கலன் அமைக்க 100 சதவீத மானியம் தரவே டும் என்பது உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்ற பட்டன.

கலந்து கொ டவர்கள்

நிகழ்ச்சியில் வங்கி மேலாளர்கள், தோட்டக்கலைத்துறையினர் மற்றும் பவானி வட்டார அனைத்து உழவர் மன்ற நிர்வாகிகள், பொறு பாளர்கள், விவசாயிகள் கலந்து கொ டனர்.